DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No. 9 of 2019

Prosecution witness : LW- 5 / PW -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனசேகரன் | Taluk | : | |
| Father's Name | : | ஏழுமலை | Calling | : | |
| Village | : | செங்கரை | Age | : | 27 |

( Accused Called absent petition filed and allowed. )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.11.2023

முதல் விசாரணை நேரம் மதியம் 2.50

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகின்றேன்.

2. கடந்த 20.12.2016ம் தேதியன்று நான் செங்கரையிலிருந்து சூளைமேனி நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தேன் நான் 30 மீ 40 மீ பின்னால் வந்துக்கொண்டிருக்கும்போது Scooty முன்பக்கமாக சென்றுக்கொண்டிருக்கும்போது டிராக்டர் பின்னால் மோதியது.

3. அதன் பின்னிட்டு வீட்டிற்கு தகவல் தெரிவித்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் அப்போது அங்கு கூட்டமாக இருந்தது.

4. அதன்பின்னிட்டு என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார் சாட்சிக்கு இருக்கமுடியுமா என்று கேட்டார் இருக்கிறேன் என்றேன் என்னை விசாரித்து வாக்கு மூலம் பதிவுசெய்துக்கொண்டார்.

**<u>எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எத்தனை மணிக்கு எங்கிருந்து எந்த பக்கமாக சென்றேன் என்று போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் நேரம் சொல்லவில்லை என்று சொன்னால் காலை 9.00 மணி முதல் 9.30 வரை இருக்கலாம்.

2. இவ்விபத்தில் பாதிப்புற்ற நபர் செங்கரை கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

3. எந்த இடத்தில் டிராக்டர் மோதியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் என்னிடம் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை தற்போது கூறிகிறேன் செங்கரையிலிருந்து சூளைமேனி செல்லும் சுடுகாட்டில் டிராக்டர் ரோட்டின் மேல் ஏறும்போது விபத்து ஏற்பட்டது.

4. அந்த டிராக்டரில் கலப்பை பொறுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு அது ஞாபகம் இல்லை 7 வருடம் ஆனதால்.

5. நான் இந்த விபத்தினை பார்க்கும்போது சாலையில் இருந்து டிராக்டர் மனோஜ் என்பவர் மீது மோதியது என்று சொன்னால் சரிதான். மனோஜ் என்பவருடன் இரண்டு நபர்கள் இருந்தார்கள்.

6. நான் டிராக்டரை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். நான் சொல்வதுபோல் டிராக்டரின் முன்பக்கம் பைக்கின் பின்பக்கம் மோதியது என்று சொன்னால் சரிதான்.

7. விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் சாலை சிப்காட் சாலை என்றால் சரிதான்.

8. ஒரே சமயத்தில் போகும் வழியில் இரண்டு வாகனங்களும் வரும்வழியில் இரண்டு வாகனங்களும் இடையில் தடுப்பு சுவரும் இருக்கும் என்றால் சரிதான்.

9. நான் கண்ணுற்ற சாட்சியத்தின் படி டிராக்கடரின் முன்பக்கம் மோதியிருந்தால் டிராக்டரின் டயர் அவர்மீது ஏறியிருக்கும் என்றால் டிராக்டரின் டயர் ஏறவில்லை.

10. டிராக்டரின் ஓட்டுநர் அவரது வாகனத்தை சூளைமேனி நோக்கிதான் ஒட்டி சென்றார் என்றால் உள்ளே சர்வீஸ் சாலையில் இருந்து ஏறி சூளைமேனி நோக்கி சென்றார்.

11. சர்வீஸ் சாலையில் இருந்து மெயின்ரோடு ஏறி சென்றுக்கொண்டிருக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

12. நான் போலீசார் விசாரணையின் போது மற்றும் இந்நீதிமன்றத்தில் முதன்மை சாடசியம் அளிக்கும்போது அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

13. விபத்து ஏற்பட்ட இடம் வலதுபுறமா, இடது புறமா மத்தியிலா என்றால் இடதுபுறம் ஏற்பட்டது.

14. இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள அசா1 மனோஜ்குமார் அசா2 கார்த்திக்ராஜா அசா3 சதீஷ் அசா4 சேகர் ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் அவர்களது டிராக்டர் மீது மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றாலும் நான் எனது சாட்சியத்தில் டிராக்டர் தான் அவர்களது மீது மோதியது என்று கூறியுள்ளேன் என்பதால் நான் சொல்வது சரியா அதற்கு இதற்கு முன்பு சாட்சியம் அளித்தது சரியா என்றால் இதுகுறித்து நீதிமன்றம் தான் விசாரித்து சொல்லவேண்டும்.

15. நான் விபத்தை நேரில் பார்க்காமல் விபத்தில் காயமுற்ற நபர்கள் எங்களது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. பாதிப்புற்ற நபர்கள் 3 பேர் இருசக்கர வாகனத்தில் சென்றார்கள் என்று கூறியுள்ளது சரியா என்றால் சரிதான்.

17. மனோஜ்குமார் என்பவர் அதிவேகமாகவும் அஜாராக்கரதையாகவும் வாகனம் ஓட்டி டிராக்டர் மீது பின்னால் மோதி காயம்ஏற்படுத்திக்கொண்டதை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

18. இவ்வழக்கின் எதிரி வயலில் ஏர் உழுது அதே வாகனத்தை எடுத்து சாலையில் வரும்போது மனோஜ்குமார் என்பவர் இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்பதை மறைத்து விபத்தில் காயமுற்ற நபர்கள் எனது ஊர்க்காரர் என்பதால் மறைத்து பொய்சாட்சியம் அளிககின்றேன் என்றால் சரியல்ல.

19. என்னிடம் போலீசார் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

20. என்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கினார்களா என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

21. எப்போது எங்கு வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்ற விவத்தை நீதிமன்றத்தில் சொல்லமுடியுமா என்றால் சம்பவம் நடந்த அன்றே சம்பவஇடத்திலேயே வைத்து வாங்கினார்கள்.

22. எத்தனை மணிக்கு போலீசார் சம்பவஇடத்தில் வாக்குமூலம் பெற்றார் என்றால் சுமார் 10 மணி இருக்கும்.

23. கடந்த 21.10.2016 அன்று இரவு 9.20 மணிக்கு சாட்சி சேகர் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் தான் வழக்கு பதிவு செய்து அதன்பின்னர் தான் போலீசார் சாட்சி விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஆனால் உண்மைக்கு புறம்பாக விபத்து நடந்து 20 நிமிடத்தில் வாக்குமூலம் வாங்கியதாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 3.30**